



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 3. இதழ் – 5. செப்டம்பர் – அக்டோபர் 2017




**R5698**

## Faith the Mainspring of Consecration
## அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம்

*“நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.” எபிரேயர் 10:23*

அப்போஸ்தலர் பவுல், ஆதிகால சபையில் நம்பிக்கையில் உறுதியில்லாமல் இருந்தவர்களுக்கும், ஒழுங்காக பற்றிக்கொள்ளாதவர்களுக்கும் இங்கே எழுதுகிறார். கர்த்தர் மற்றும் கிறிஸ்தவ வழியை பொறுத்தவரை ஒரு சமயத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தவர்கள் குறைந்த பட்சமாக அனலுமின்றி, குளிருமின்றி ஆகிவிட்டார்கள் என்று அவர் அவர்களிடம் கூறுகிறார். தேவனுடைய பிள்ளையினிடத்தில் விசுவாசத்தில் உறுதியும், நம்பிக்கையை அறிக்கையிடுவதில் உறுதியும் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரே சீராய் இருப்பதற்கு அவசியமாயிருக்கிறது என்று அறிவிக்கிறார். நாம் ஒவ்வொருவரையும் கர்த்தரிடம் அர்ப்பணம் செய்ய வழிநடத்துவதற்கு நமது விசுவாசமே உந்துவிசையாயிருக்கிறது. தேவன் பாவ மன்னிப்பிற்காக இரட்சகரை ஏற்பாடு செய்திருந்தார் என்று நாம் விசுவாசித்தோம். நாம் ஏற்புடையவர்களாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகவும் நாம் நம்பினோம்; மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், அவரது சுதந்தரராகவும் கர்த்தராகிய இயேசுவின் உடன் சுதந்தரராகவும் ஆக்கப்படுவோம் என்றும் நம்பினோம். இவைகளெல்லாம் நம்மை முத–ல் தேவனிடத்திற்கு ஊக்கமளிக்கும் தூண்டுதலாக இருந்தன. அவைகள் நம்மை தீர்மானம் எடுக்க வழிநடத்துகிற ஒரு நல்ல காரியத்தை செய்தன.

அப்போஸ்தலர் பவுல், இந்த எபிரேய கிறிஸ்தவர்கள் நல்ல ஊழியம் செய்ததாக கூறுகிறார்; ஆனால் அவர்களில் சிலர் குறைந்த பட்சமாக சிரத்தையின்மையை வளர்த்திருந்தார்கள். காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய அவர்களுக்கு “தேவனுடைய மூல உபதேசங்களை” மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருந்தது என்று அறிவிக்கிறார். அவர்கள் தங்களது விசுவாசம் மற்றும் கர்த்தருக்குள்ளான தங்களது உறுதியின் ஒரு பகுதியை இழந்திருந்தார்கள்.

நமது அனுபவத்தின் மூலம், காரியங்கள் நமது மனதிற்கு முன்பாக எப்படி இருந்தது என்பதையும், பிறகு எப்படி அவை மங்கின என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். ஆவிக்குரிய காரியங்கள் இப்படியாக மங்கும் பொழுதும், ஒரு காலத்தில் நம்மால் செய்ய முடிந்ததுபோல ஆவிக்குரிய சத்தியங்களை இப்பொழுது கிரகிக்க முடியாமல் போகும்போதும், கிறிஸ்துவுக்குள்ளான மரியாதையும் சந்தோஷமும் சிறிது சிறிதாக மங்கும்பொழுதும், நாம் நமது அர்ப்பணத்தின் இந்த உந்து விசையி–ருந்து வெளியே செல்கிறோம். நமது விசுவாசத்தை இழக்கிறோம். ஆகையால் நாம் அலைந்து திரிந்து பாறையில் மோதிவிடாதபடி நமது ஆத்துமாக்கள் என்னும் இந்த நங்கூரத்தை ஆர்வமுடன் பிடித்து கொள்வோமாக. நாம் விசுவாசத்தில் உறுதியாயிராவிட்டால், நாம் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்; ஏனெனில், “விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.” விசுவாசமில்லாமல் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொண்டு நல்ல போராட்டத்தை போராட போகவே முடியாது. ஒரு போராட்டம் உண்டு என்று நாம் விசுவாசிக்காததால், போராட்டத்திற்கு செல்லமாட்டோம். அல்லது இந்த போராட்டத்தின் பலனால், வாழ்க்கைப் பிரச்சனை மற்றும் துன்பங்கள் அதில் இருப்பதால் எந்த பரிசையும் நம்பாததால் போராட செல்லமாட்டோம்.

### நமது சொந்த பொறுப்பு

நமது கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பிப்பதும் முடிப்பதுமாகிய விசுவாசத்தில் நாம் உறுதியாய் இருக்க வேண்டும் என்பதை அப்போஸ்தலரின் வாதமாக இருக்கிறது. நாம் விலகி போகாதிருந்தால், கர்த்தர் நம்மை தாங்கவல்லவராயிருக்கிறார். அவர் தாங்குவார், நாம் உண்மையுள்ளவர்களாய் அவரில் நிலைத்திருப்போம் என்ற ஒரு நிபந்தனையின் பேரில் தான் கர்த்தர் நம்மை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எனவே எந்த சந்தேகத்திற்கும் பயத்திற்கும் இடங்கொடுக்காமல். அசைவுமில்லாமல், நாம் ஒப்புக்கொண்டிருக்கிற இந்த விசுவாத்தை உறுதியாய் பற்றிக் கொண்டிருப்பதில்தான் எல்லாம் சார்ந்திருக்கிறது, “வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வராயிருக்கிறார்” என்ற உறுதிமொழியே இறுதியான வெற்றியில் நமது நம்பிக்கைக்கு அடிப்படையாக இருக்கிறது. “மகா மேன்மையும் அருமையுமான

வாக்குத்தத்தங்கள்" நமக்காக வேதாகமத்தில் உள்ளது என்பதை நாம் அறிவோம். நம்மை சார்ந்திருப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று கர்த்தர் நம்மிடம் சொல்லும் பொழுது, அவரது கிருபை நமக்கு போதும் என்றும் நமது பலவீனத்தில் அவரது பலம் பூரணமாய் விளங்கும் என்றும் நமக்கு உறுதியளிக்கிறார். நாம் அதை பற்றியிருப்பதை மட்டுமே செய்ய வேண்டும். நாம் நமது நம்பிக்கையில் உறுதியாய் இருப்போமாகில், தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகள் அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம். அவர் உண்மையுள்ளவராயிருப்பார். அவர் தமது வாக்குத்தத்தத்தை புறக்கணிக்கமாட்டார். அவர் சொல்-யிருக்கிற அனைத்தையும் அவர் செய்வார்.

நாம் தயக்கமும் அசைவும் உள்ளவர்களாயிருந்தால், நாம் நமது விசுவாசத்தையோ அல்லது அன்பு மற்றும் கீழ்ப்படித-ன் ஆவியையோ இழப்போம். ஆகையால் இந்த நிலைமைகளில் ஏதாவது ஒன்று நம்மிடம் இருப்பதாக உணர்ந்தால், உடனே தேவனுடைய வசனம் மற்றும் ஜெபத்திற்கு, நமது விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியம் புதுப்பிக்கப்படும்படியாக செல்லவேண்டும். நாம் கர்த்தரிடம் என்றும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறோமா என்பதை உறுதி செய்யவும், நமது உடன்படிக்கைக்கு இசைவாக நமது ஜீவனை கொடுக்க நாடுகிறோமா என்பதைக் காணவும், பரிசுத்த ஆவியின் கிருபைகளிலும் கனிகளிலும் அபிவிருத்தி அடைகிறோமா என்பதைக் காணவும் நாம் அனுதினமும் நமது இருதயத்தை பரிசோதிக்க வேண்டும். இப்படியாக நமது பிரதிக்கினைகளை நிறைவேற்றுவோம், அப்பொழுது, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம்" (2பேதுரு 1:11) நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்.

*"விழித்துக்கொள், என் ஆத்துமாவே விழித்துக்கொள்!*
*விலையேறப்பெற்ற நாட்கள் பறந்துகொண்டிருக்கிறது!*
*இளைப்பாறுதலுக்கோ, சோம்பேறித்தனத்துக்கோ இடம் தராதே*
*கடந்த கழிந்த நாட்களெல்லாம் அஸ்தமிக்கின்றன.*

"*எழும்பு, உன் பட்டயத்தைக் கட்டிக்கொள்!*
*யுத்தம் முடிந்தவிட்டது என்று கனவு காணாதே!*
*கடைசி யுத்தம் துவங்கியது இப்படிப்பட்ட காரணம்*
*இதுவரை வந்ததில்லை!*

*"இன்னும் இல்லை, பரிசு, ஆனால் சீக்கிரத்தில் –*
*இன்னும் ஒரு கடைசி முயற்சி*
*உன்னுடையது, அதன் பிறகு கிரீடம்*
*ஆனந்தம், களிப்பு என்றென்றுமே!"*